**DEPOSITION OF WITNESS**

IN THE COURT OF I ADDL.DISTRICT & SESSIONS JUDGE, THOOTHUKUDI.

Case No. S.C.No. 127/2022

Prosecution witness for P.W.3

| | | | |
|---|---|---|---|
| Name | ... திரு. ராகவன் | Caste | ... |
| Father's/Husband Name | ... | Calling | ... |
| Village | ... | Religion | ... |
| Taluk | ... | Age | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 23.10.2025.

Accused present.

<u>முதல் விசாரணை</u>

நான் தற்போது காயல்பட்டிணத்தில் குடியிருந்து கட்டுமான தொழில் செய்து வருகிறேன். இறந்து போன லட்சுமணனை தெரியும். ஆஜர் எதிரியை தெரியும். 15.01.2020 அன்று பொங்கல் தினத்தன்று பகல் சுமார் 12.10 மணியளவில் அடைக்கலாபுரம் அரசு மதுபான கடையில் மது வாங்குவதற்காக வரிசையில் நின்று கொண்டிருந்தேன். பொங்கல் தினம் என்பதால் கூட்டம் அதிகமாக இருந்தது. எனக்கு 10 நபர்களுக்கு முன்பாக லட்சுமணன் நின்று கொண்டிருந்தார். அப்போது ஆஜர் எதிரி அனைவரையும் முந்தி சென்று மது வாங்குவதற்காக சென்றார். அப்போது ஆஜர் எதிரிக்கும் லட்சுமணனுக்கும் வாக்குவாதம் ஏற்பட்டு கைக்கலப்பாகி இருவரும் ஆபாசமாக பேசிகொண்டார்கள். அப்போது கீழே கிடந்த உடைந்த பீர் பாட்டிலை எடுத்து ஆஜர் எதிரி மேற்படி லட்சுமணனை முன் கழுத்தில் குத்தி ஆழமான காயம் ஏற்பட்டு இரத்தம் அதிகமாக வெளியேறி அவர் அங்கேயே மயங்கி விழுந்து இறந்துவிட்டார். மதுபான கடையில் பணியில் இருந்த அ.சா.1 மற்றும் 2 காவல் நிலையம் சென்று புகார் கொடுத்தார்கள். நான் லட்சுமணன் வீட்டிற்கு கைப்பேசி மூலம் தகவல்

கொடுத்தேன். அப்போது நானும் எங்கள் ஊர் பையன் பஞ்சுகுமார் என்பவரும் சம்பவ இடத்தில் இருந்தோம். போலிசார் என்னை விசாரித்தார்கள். மேற்படி உடைந்த பீர் பாட்டில் சா.பொ.1.

Taken down before me in open court, in the presence of the Accused read over to the witness and admitted by the deponent to be correct

I Additional District& Sessions Judge,
Thoothukudi.